**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070120225099

Volume: 7

Issue: 1

Month: July

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.04.2022

Accepted: 06.06.2022

Published: 01.07.2022

Citation:
Anantharajan, G. "Racial Issues Faced by Expatriate Tamils in Diaspora Poetry." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 1, 2022, pp. 85–90.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i15099.

*Corresponding Author:
madhunisha432015@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Racial Issues Faced by Expatriate Tamils in Diaspora Poetry

**G. Anantharajan**
*Research Scholar, Tamil Research Centre*
*The American College, Madurai, Tamil Nadu, India*
*http://orcid.org/0000-0001-5960-4640*

**Abstract**

In the works of Tamils who migrated from Eelam to other countries after the 80s, especially in the poems, Losses caused by the war, Diaspora crisis, Travel tragedies, Travel agents' tricks etc. are prominent. Later, over time, poems on refugee crises in the asylum, discrimination issues, nostalgia for the homeland, difficulties in adapting to the new cultural context, feminist ideas, sexual issues, oppression of people of colour and racism, as well as alienation - were published. Among them, Tamils have faced a large number of problems, especially those of race and colour.

**Key Words**: Migration, Racism Attacks, Black Dog

**References**

1. https://ta.wikipedia.org/Karuppina_ Makkal .
2. P. Thirunavukkarasu, Pulampeyar Kavithaigal, P. 72.
3. Ibid, P. 61.
4. Ibid, P. 66.
5. Gowri, Agathi, p. 56.
6. P. Thirunavukkarasu, Pulampeyar Kavithaigal, P. 110.

# புலம்பெயர்க் கவிதைகளில் காட்சிப்படும் புலம்பெயர்த் தமிழர்கள் சந்திக்கும் நிறவெறிப் பிரச்சினைகள்

*க. ஆனந்தராஜன்*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***
*80களுக்குப் பிறகாக ஈழத்திலிருந்து பிற தேசங்களுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களின் படைப்புகளில் குறிப்பாககவிதைகளில் போரினால் ஏற்பட்ட இழப்புகள் 'புலம்பெயர்ச்சூழல் நெருக்கடி' பிரயாண நிலை அவலங்கள் 'பயண முகவர்களின் ஏமாற்றுத் தந்திரங்கள் முதலானவை பிரதான இடம் பிடித்துள்ளன. பின்னர் காலப்போக்கில் இந்நிலைமாறி புகலிடத்தில் வாழ்வியல் நெருக்கடிகள் பாகுபாட்டுப் பிரச்சினைகள், தாயகம் மீதான ஏக்கம்புதிய பண்பாட்டுச் சூழலில் பழக்கப்படுவதிலுள்ள இடர்பாடுகள்' பெண்ணியச் சிந்தனைகள் 'பாலியல் பிரச்சினைகள்' நிறம் மற்றும் இனத்துவேஷம் கொண்டவர்களின் அடக்குமுறைகள் மற்றும் அந்நியமனோபவம் போன்ற புகலிடம்சார் வாழ்வியல் நிலைகளைச் சார்ந்தும் கவிதைகள் வெளிவந்து ள்ளமையைப் பார்க்க முடிகிறது. அவற்றுள் குறிப்பாக இனம் மற்றும் நிறம்சார் பிரச்சினைகளைத் தமிழர்கள் பெருமளவில் சந்தித்துள்ளனர்.*

***முக்கியச்சொற்கள்:*** *புலம்பெயர்வு, நிறவெறித் தாக்குதல்கள், கறுப்பு நாய்*

## முன்னுரை

தற்காலத் தமிழிலக்கியப் பரப்பில் புலம்பெயர்த் தமிழர்களுடைய இலக்கிய வெளிப்பாடுகள் பிரதான இடத்தைப் பெறத்தொடங்கியுள்ளன. புலம்பெயர் எழுத்துக்களை விரும்பிப் படிக்கும் முறைமையும் தற்போதைய வாசிப்புத் தடத்தில் பரவலாக நிகழ்ந்துவருகிறது. இத்தகுப் புலம்பெயர் இலக்கியங்களானவை சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை முதலான இலக்கியத் தளங்களனைத்திலும் தமது ஆதிக்கத்தை நிகழ்த்திவருகின்றன. இவற்றுள் புலம்பெயர் கவிதைகளே பெரும்பாலானோரின் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளன. ஏனெனில் கவிதைகளானது புலம்பெயர் மக்களின் வாழ்வியல் அனுபவங்கள், இழப்புகள் மற்றும் வலிகளை மிகவும் காத்திரமாக வெளிப்படுத்தும் திறத்தினவாக உள்ளன. அந்தவகையில், புலம்பெயர் கவிதைகளின் உள்ளடக்கப் பொருண்மைகளானவை தாயக நனவோடை, புலம்பெயர்ப் பயணம் மற்றும் புகலிட வாழ்வியல்முறை எனப் புதிய புதிய பாடுபொருட்களைத் தன்னுள் உட்புகுத்திக் கொண்டே வருகின்றன. அவ்வாறான புலம்பெயர் கவிதைகளின் பாடுபொருட்களுள் புகலிடங்களில் புலம்பெயர்த் தமிழர்கள் சந்தித்துள்ள நிறவெறிப் பிரசசினைகளைப் பற்றியும் அவை கவிதைகளினுள் வெளிப்பட்டுள்ள விதங்கள் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

## இனம் மற்றும் நிறப் பாகுபாடு

ஆதிகாலத்தில் நாடோடியாக வாழ்ந்த மனித இனமானது பிற்பாடு பரிணாம வளர்ச்சிகண்டு தமக்கெனத் தனிப்பட்டத் தொழில், உணவு, உடைகள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொள்கிறது. பின்னர்,

காலப்போக்கில் வெவ்வேறு குழுக்களாக இம்மக்கள் பரிணாமம் அடைந்துள்ளனர். அதனைத் தொடர்ந்தே சமூகத்தில் மக்கள் தனிப்பட்டக் குழுக்களாகத் தோன்றி, தங்களுக்கெனத் தனித்துவமான பண்பாடு, மொழி, உடை, உணவுமுறை மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை வகுத்துக் கொண்டு செயல்பட்டுள்ளனர். இவ்வாறாக, பல்வேறு சமூகக் கலாச்சாரங்களைக் கொண்ட மக்கள் தங்களின் சமூகத்தை மேம்படுத்தவும், தனித்து விளங்கச் செய்வதற்காகவும் பிற சமூகக் குழுக்களை அடக்கவும் அழிக்கவும் விழைந்திருக்கின்றனர். இதனடிப்படையில் பொருளாதாரம், மக்கள்தொகை, கல்வி போன்றனவற்றால் மேலோங்கிக் காணப்படக்கூடிய வல்லாதிக்கம் கொண்ட சமூகம், சிறுபான்மைச் சமூகத்தைத் தாக்குவதன் விழைவாக இனப்பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனை உறுதிப்படுத்துவதாகவே யூதர்கள், ஆப்பிரிக்கக் கறுப்பினத்தவர்கள் மற்றும் ஈழத்தமிழர்கள் மீதான இனக் கலவரங்கள் காணக்கிடைக்கின்றன.

இயற்கையின் அமைப்பில் அனைத்திற்கும் ஒரு நிறமுண்டு. அதனைப் போலவே மனித உடம்பிலும் அதாவது தோலிலும்கூட நிற வேறுபாடுகள் உள்ளன. இது நாம்வாழும் பிரதேசம் அதனின் தட்பவெப்பநிலை மற்றும் மரபுவழி ஜீன்கள்; என்பவற்றைப் பொறுத்து, நம் மனிதர்களிடையே நிறவேறுபாடும் காணப்படுகிறது. அறிவியல் ஆய்வானது, “மெலனின்” குறைவாக இருப்பவர்களே வெள்ளை நிறத்தைப் பெற்றிருப்பார்கள் என்கிறது. இன்றைய உலகில் கறுப்பு, சிவப்பு என்கிற நிறப்பாகுபாடானது, சமூக மட்டத்தில் கீழ்சாதிக்காரன், மேல் சாதிக்காரன் என்கிற கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இதுமட்டுமன்றி, கறுப்பு என்பது அடிமைத்தனத்திற்கும் ஒடுக்குமுறைக்குரியதாகவும் சிவப்பு என்பது வல்லாதிக்கத்திற்கும் அதிகாரத்திற்கும் உரியதாகவும் குறியீடுகளாகியுள்ளன. மேலும், மக்களின் வழக்காற்று முறையில் “சிவப்பாக இருப்பவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள்” என்பதாகச் சிவப்பு நிறமானது அனைவரது மனதிலும் மேலோங்கியிருப்பதை அறியலாகிறது. இத்தகு மனோநிலை கொண்டே நிற வெறியர்கள் கறுப்பு நிறத்தவர்களை மிகவும் இழிவாக நடத்துகின்றனர். அதனை உறுதிப்படுத்துவதாகவே ஆப்பிரிக்க இனமக்கள் மீதான அமெரிக்காவின் ஒடுக்குமுறை மற்றும் அடிமைப்படுத்தல் இருப்பதைக் கூறலாம். இவ்வாப்பிரிக்கக் கறுப்பினத்தவர்களை ஐக்கிய அமெரிக்காவானது 1650 ஆம் ஆண்டு முதலே அடிமைப்படுத்தியுள்ளது. மேலும், இக்கருப்பின மக்கள், சமூகத்தில் எந்தவிதமான பங்கீடும் உரிமையுமில்லாத வகையில் ஒடுக்கவும் ஒதுக்கவும் பட்டுள்ளனர்[1]. இவ்வாறாக, நிறத்துவேஷம் கொண்ட அமெரிக்காவானது கறுப்பின மக்களை இன்றவும் பாகுபாட்டுக் கண்ணோட்டத்துடனேயே அணுகி, அவர்கள் மீது பல வகைகளிலும் தாக்குதல்களை நிகழ்த்திவருகிறது.

மேலைத்தேயநாடுகளில்பெரும்பாலான நாடுகள், தங்களின் நாடல்லாத பிற தேசத்தவரை இனம் மற்றும் நிறப்பாகுபாட்டுக் கண்ணோட்டத்துடனேயே பெரிதும் பார்க்கின்றனர் இவ்வாறான, பாகுபாட்டுத் தன்மை கொண்ட நாடுகளில் அமெரிக்கா, ஜெர்மனி, நார்வே, சுவிட்ஸர்லாந்து, டென்மார்க் மற்றும் பிரான்ஸ் ஆகியன புலம்பெயர் மக்களை இனம், நிறம், மொழி மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் பாகுபடுத்தியே அணுகுகின்றன. இத்தகு அணுகுமுறையால் புலம்பெயர்ந்த மக்களனைவரும் பல்வேறான பிரச்சினைகளையும் துயர்களையும் சந்திக்கின்றனர்; இந்த வகையினை அடியொற்றிப் பார்க்கவேண்டிய சூழலில் தான் இன்றளவும் புகலிட நாடுகளில் வாழுகிற நவநாஜிகளின் இனத்துவேஷம் மற்றும் நிறத்துவேஷத்தினால், புலம்பெயர்த் தமிழர்களுக்கு ஏற்படுகிற பலவிதமான பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

### புலம்பெயர்த் தமிழ்க் கவிஞர்கள்

தாயகத்தை விட்டு நீங்கிப் புகலிடத்தில் வாழும் வ.ஐ.ச. ஜெயபாலன், திருமாவளவன், சேரன், கி.பி.அரவிந்தன், சக்கரவர்த்தி, ஆதவன், சுகன், நட்சத்திரன், தா.பாலகணேசன், குப்பிளான் ஜெகன், இளவாலை விஜயேந்திரன், ரஜீன் குமார், கூடல் சங்கமதேவன், வெல்வ மதீந்திரன், செல்வம் அருளானந்தம், தயாநிதி, இளங்கோ, ரவி, சுசீந்திரன், துஷ்யந்தன், செல்வம், முல்லை அமுதன், செழியன், செவ்விந்தியன், ரஞ்சன், வசந்தராஜா, இளைய அப்துல்லா, ஆனந்த பிரசாத், பாமினி, சி. சிவசேகரம், வயவைக் குமரன் முதலிய ஆண் கவிஞர்களும் சத்தியா, துர்கா, தேவி கணேசன், அருந்ததி, பிரதீபா, கௌரி, தமயந்தி, ரமணிதரன், அர்ச்சனா, பாமதி, பிரியதர்ஷினி, சுமதி ரூபன், மைத்திரேயி, நிருபா, ராஜாத்தி, பார்கவி, கோசல்யா, முதலானப் பெண் கவிஞர்களும் புலம்பெயர் கவிதையுலகில் குறிப்பிடத்தக்கவர்களாக உள்ளனர். இவர்களின் கவிதைகளானவை தனி நூலாகவும் தொகுப்பாகவும் வெளிவந்துள்ளன. மேலும், புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து வெளிவருகின்ற பல்வேறு இதழ்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் முதலியவைகளும் இவர்களின் கவிதை முயற்சிக்கு வழிவகை செய்துகொடுக்கின்றன. இவர்களின் கவிதைகள் புலம்பெயர்ந்த நாடுகளில் மட்டுமன்றி இலங்கை மற்றும் தமிழ்நாட்டிலுமகூடப் பெரும்பாலானோரின் வாசிப்பிற்குரியவனவாக விளங்குகின்றன. புலம்பெயர் கவிதைகள் தம் பொருண்மைகளும் கூடக் காலப்போக்கிற்கேற்பப் பண்முகப் பரிணாமம் பெற்றும் வெளிவருகின்றன. அவற்றுள், புகலிடத் தமிழர்கள் அனைவரும் பேரளவில் சந்தித்திருக்கூடிய பிரச்சினையான நிறப்பாகுபாட்டைப் பற்றியும் பல்வேறான கவிதைகளைப் படைத்தளித்துள்ளனர்.

### புலம்பெயர் கவிதைகளில் புலம்பெயர்த் தமிழர்களின் நிறப் பிரச்சினைகள்

புலம்பெயர்ந்த மக்கள் புகலிடச் சூழலில் எதிர்கொள்கிற இன மற்றும் நிற அடிப்படையிலான பாகுபாடுகள், அவற்றினால் ஏற்படுகின்ற தாழ்வுணர்வுகள் மற்றும் தனிமையுணர்வுகள் போன்ற, பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி இன்றளவில், புலம்பெயர் கவிதைகளில் விரிவாகப் பேசப்பட்டு வருகின்றன என்பது வாசிப்பு வழியில் தென்படுன்கிற செய்தியாகின்றது

உலகளவில் கறுப்பர், வெள்ளையர் என்ற நிறவாதம், அடிப்படையிலான வெறுப்புணர்வு மற்றும் நிறுத்துவேஷத் தாக்குதல்கள் என்பன, ஆப்பிரிக்க இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமின்றி புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களுக்கும் கூடக் கணிசமாகவே நடந்தேறியுள்ளன. இதற்குச் சில புலம்பெயர் கவிதைகள் சான்றுகள் பகர்கின்றன. இதற்கு மிகப்பொருத்தமான உதாரணமாக நிருபா என்பாரின் கவிதையொன்று அமைந்திருக்கிறது. கறுப்பு நிறத்தைக் கண்டாலே அருவருப்பாகவும் தீண்டத்தகாதவர்களைப் போன்றும் பாவிக்கும் புகலிடத்து வெள்ளைநிறக் குடிவரவு அதிகாரிகளின் மனோநிலையானது, நிருபாவின் “ஆப்பிள் மரத்தடியில் மாங்காய்களைத் தேடி” எனும் கவிதையில் வெளிப்பட்டுள்ளது.

***எட்டிநில் கறுப்பனே!***
***வெண்முகங்கள்***
***விட்டெறியும்***
***ஏளனப் பார்வையில்***
***தலை குனியும் மௌனமாய்[2]***

என்பதாக இடம்பெற்றுள்ள இக்கவிதை, மேற்சுட்டிய நிறப்பாரபச்சங்காட்டி நிராகரிக்கிற நிலைமையை உணர்த்தி நீள்கிறது.

தாயகத்தில் உயிர்வாழ்வது கடினம் என்ற நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்களை, கறுப்பினத்தவர்கள் என்ற ஏளனப் பார்வையிலேயே, புகலிட நாட்டினர் அனைவரும் கீழ்மையாகக் கையாளுகின்றனர். இவ்வாறாகவே, நிறவெறி கொண்ட வெள்ளையர்களின் மனோநிலையை தம்பாவின் “இனிக்கும் இரவும் புளிக்கும் பகலும்” என்கிற தலைப்பிலமைந்த கவிதையின் வரிகள் புலப்படுத்திட முயல்கின்றன. அது பின்வருமாறு:

**கற்றுக்கொள் கருப்புநாயே!**
**சாகப்பிறந்த பன்றியே**
**தொழுவத்தைவிட்டு ஏன் வந்தாய் வெளியே?**
**கறுப்பர் அழிந்தால் மட்டும்**
**புனிதமடையும் பூமி[3]**

புகலிட நாட்டிற்குள் நுழையும் ஈழத் தமிழ் அகதிகள், குடிவரவு அதிகாரியின் அக்கினிப் பார்வையின் முன்னால் கறுப்பன் என்றவொரே காரணத்தினால், கூனிக்குறுகிப் போகின்றனர். இந்நிலையை செல்வம் அருளானந்தாவின் “வியாகுல பிரசங்கம்”; என்ற கவிதையானது பின்வருமாறு சித்திரிக்கின்றது.

**வெளிக்கிட்டு**
**முப்பத்தி மூன்றாம் நாள் வந்து சேர்ந்தேன்**
**காலம் எல்லாம் நடந்தவன் போல**
**குடிவரவு அதிகாரி**
**கடும் வெயில் கண்டவர்போல்**
**சிவந்திருந்தார்**
**தலித்தாய் பிறந்து**
**தமிழனாய் குனிந்து**
**கறுப்பனாய் எனை உணர்ந்தேன்[4]**

இவ்வரிசையிலேயே அமைந்துள்ள, No Black No Dog” என்ற தலைப்பிலான கௌரியின் கவிதையானது, இங்கிலாந்து மக்கள் பலரிடம் இருக்கின்ற நிறவெறியை அம்பலப்படுத்துவதாக உள்ளது. மேலும், இங்கிலாந்து நாட்டின் நிறவெறி கொண்ட வெள்ளையர்களிடத்தில் கேள்வி கேட்பதாகவும் பின்வரும் கவிதை அமைந்துள்ளது.

No Black No Dog
**இந்த வார்த்தைகள்**
**இங்கிலாந்து நாட்டில்**
**மனிதத்தை மறுக்கும்**
**மடையர்களினால்**
**வாசிக்கப்பட்டவை வடிக்கப்பட்டவை**
**எங்கள் நாட்டில்**
**இன்னமும் இவர்களை**
**வரவேற்கின்றோம்**
**இவர்கள் மட்டும் ஏன்?**
**நன்றியுள்ளவர்களுடன்**
**நட்பு கொள்ள மறுக்கின்றனர்[5]**

போரினால் உலகின் நாலாதிக்குகளிலும் தூக்கியெறியப்பட்ட தமிழர்கள் புகலிடந்தேடி அகதிகளாகச் சென்ற தேசங்களில், சந்திக்கின்ற பன்முகப் பிரச்சினைகளில் மிகவும் துயரமானதாகவும் வலிகள் நிறைந்ததாகவும் நிறுத்துவேஷப் பாகுபாடு என்பதே உள்ளது. அவ்வாறு, அகதியாக அந்நிய தேசத்தில் வாழத்தலைப்பட்ட தமிழர்களுக்கு நேர்ந்த அவலத்தைக் கும்பிளான் ஜெகனின் “அகதி வாழ்வு” என்ற கவிதை வெளிப்படுத்துகிறது.

**சோழகக் காற்றில்**
**பஞ்சாக**
**தூக்கி வீசப்பட்ட**
**ஒரு அந்நிய தேசத்தில்**
**என் வாழ்வை**
**எங்கே தேடுவேன்.**
**அகதியின் வாழ்வின்**
**அவலமும்**
**நிற முகூர்த்தத்தில்**
**வெள்ளையாய் இல்லாமையால்**
**நையாண்டிப் பேச்சுக்கள்**
**துளைத் தெடுக்க**
**வாழ்வு கூனிக் குறுகும்[6]**

மேலைதேய நாடுகளின் நிறவெறிப் பாகுபாட்டிற்கு ஆப்பிரிக்க இனமக்கள் மட்டுமன்றி புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களும் கூட

ஆட்பட்டேயிருக்கின்றனர். இதனால், புகலிட நாட்டில் தமிழ் அகதிகளனைவரும் பெரும் இன்னல்களைச் சந்திக்கின்றனர். வெள்ளையர்களின் நிறத்துவேஷத்தில் தமிழர்கள் பலர் பலவாறாகத் தாக்கப்பட்டுள்ளனர். இத்தகு நிறவெறிக் கொடுமையில்; பெண்களும் குழந்தைகளுமே கொடூரமாகத் தாக்குதலுக்கு ஆளாகின்றனர்.

## முடிவுரை

புலம்பெயர்த் தமிழர்கள் தங்களுக்கு அடைக்கலம் தந்த புகலிட நாட்டை, தங்களின் தற்காலிகத் தங்கும் விடுதிக்கான "லைசென்ஸ்" என்று மட்டுமே கருதிப் பலரும் வாழ்ந்து வருகின்றனர். இத்துடன், இவர்கள் சுதந்திர ஈழத் தாயகம் ஒன்று கிடைத்துவிட்டால், இவர்களில் பெரும்பாலானத் தமிழர்கள் மீண்டும் தாயகம் திரும்பி, கூலோ கஞ்சியோ குடித்தேனும் தமது மண்ணின் உறவுகளுடன் வாழ்ந்துவிட வேண்டும் என்பதிலேயே நாட்டமுள்ளவர்களாக உள்ளனர். இவ்வாறாக, தாயகத்தின் மீதான பிரயாசை காரணமாகப் பெற்றோர்கள் தாயகக் கலாச்சாரத்தை மறவாது வாழ்ந்தாலும் கூட, இவர்களின் பிள்ளைகளான இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள், புகலிட நாட்டில் வளர்ந்த காரணத்தால், புகலிடக் கலாச்சாரத்தையே நடப்பில் பெரிதும் பின்பற்றுகின்றனர். இவ்விதப்பட்ட பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளின் கலாச்சார வேறுபாட்டால் பலவாறாக இவர்களின் குடும்பத்திலும் பிரச்சினைகள் எழுகின்றன. இன்றைய அறிவியல் யுகத்தில், இன்றளவும்கூட இனம் மற்றும் நிறம்சார் பிரச்சினைப்பாடுகள் என்பன தொடர்ந்து நடந்தேறுவதென்பது வருத்தமளிக்கக் கூடியதாகவேயுள்ளது. இவ்வாறான, இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வானது, புகலிட நாடுகளைச் சார்ந்தோர் கவனத்தால் மட்டுமே அமையும் என்பதாக இவ்வாய்வின் வழி அவதானிக்கலாம்.

## மேற்கோள் விளக்கப் பட்டியல்

1. https://ta.wikipedia.org/கறுப்பின மக்கள்
2. ப. திருநாவுக்கரசு (தொ.ஆ.,), புலம்பெயர்ந்தோர் கவிதைகள், ப.72.
3. மேலது, ப.61.
4. மேலது, ப.66.
5. கௌரி, அகதி, ப.56.
6. முந்நூல், புலம்பெயர்ந்தோர் கவிதைகள், ப.110.